FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318761

1. District : Tirupathur PS: Vigelance and Anti-Corruption, Tirupathur Year: 2025 FIR No.: 04/2025 Date: 16.10.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a) PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 11/10/2025 at 19.30Hrs Date to : 15/10/2025 at 12.30Hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 16.10.2025 Time : 08.40 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Volume-II 16.10.2025 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Tamil typed complaint (Oral Statement)
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North East 48 Km office of the
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : at complained house Village Administrative offices, Vadaputhupattu Accused house,
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : D. Palani (b) Father's/ ~~Husband~~'s Name : Dhandapani
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 50yrs (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : coolie (g) Address :
தொழில் முகவரி No. 87, Middle Street, Vadaputhupattu, Ambur Taluk, Tirupathur District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

① Tmt. Vani, Village Assistant, O/o the Village Administrative officer, Vadaputhupattu

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு .. —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலன்ாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

D. பழனி 16-10-2025

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

16/10/2025
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 16.10.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

Name பெயர் B. Gauri
Rank நிலை Inspector of police, Vigilance and Anti-Corruption Tirupathur ..... No. எண் .....

பணிந்து அனுப்பப்படுகிறது:– இன்று 16.10.2025 ஆம் தேதி காலை 08.40 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்த போது திரு.பழனி (50/2025) த/பெ தண்டபாணி, எண்.87, நடுத்தெரு, வட புதுப்பட்டு கிராமம், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு: திரு பழனி (50/2025) த/பெ தண்டபாணி. எண்– 87. நடுத்தெரு. வட புதுப்பட்டு கிராமம், ஆம்பூர் தாலுக்கா. திருப்பத்தூர் மாவட்டம் என்பவர்து வாக்குமூலம். கைபேசி எண். 9585171298. நான் மேற்கண்ட விலாசத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகி இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் இருக்கிறார்கள். என் மனைவி பெயர் கற்பகம் நாங்கள் பூர்விகமான வடபுதுப்பட்டு கிராமத்தில் மேற்படி முகவரியில் வாழ்ந்து வருகிறோம். நாங்கள் குடும்பத்துடன் வாழ்ந்து வரும் இடத்திற்கு முதலமைச்சரின் வீட்டு மனை பட்டா இல்லாதவர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் திட்டத்தில் நாங்கள் ஏற்கனவே வீடு கட்டி குடியிருந்து வரும் இடத்தை என் மனைவி கற்பகம் பெயரில் இலவச பட்டா வழங்குவதாக சொல்லி கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு சப்கலெக்டர், RI. மனையகார் மற்றும் சிப்பந்தி ஆகியோர் எங்கள் வீட்டிடம் வந்து எங்கள் வீட்டை போட்டோ பிடித்துக் கொண்டு எங்களிடம் ஆதார்கார்டு பேன்கார்டு ரேசன்கார்டு என் இரண்டு மகன்களின் மாத சம்பள இரசீது மற்றும் எங்களுடைய போட்டோ மேலும் சில ஆவணங்களை வாங்கிக் கொண்டு என் மனைவியிடம் சில படிவங்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டு சென்றனர். நாங்கள் எதற்கு என்று கேட்டபோது முதலமைச்சரின் இலவச வீட்டு மனை பட்டா வழங்கும் திட்டத்தில் நாங்கள் இருக்கும் இடத்திற்கு என் மனைவியின் பெயரில் இலவச பட்டா வழங்குவதாக என்று சொன்னார்கள். இந்நிலையில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு எங்கள் ஊரில் இரண்டு நபர்களுக்கு முதலமைச்சரின் இலவச வீட்டு மனை பட்டா கொடுத்தனர். அப்போது பட்டா வாங்கியவரிடம் நான் விசாரித்த போது ரூ.5000/– பணம் வாங்கிக் கொண்டு இலவச பட்டா கொடுத்ததாக கூறினார்கள். அந்த சமயத்தில் எங்கள் வீட்டிடம் வந்த வடபுதுப்பட்டு சிப்பந்தி திருமதி.வாணி பணம் செலவாகும் ரெடி பண்ணி வச்சிக்கோங்க அப்படின்னு சொன்னார். எவ்வளவு பணம் என்று சொல்லவில்லை. இந்நிலையில் கடந்த 11.10.2025 ஆம் தேதி சனிக்கிழமை இரவு சுமார் 07.30 மணிக்கு என் வீட்டிடம் வந்த வட புதுப்பட்டு கிராம உதவியாளர் திருமதி.வாணி என்பவர் அதிகாரி ரூபாய் பத்தாயிரம் கேட்கிறார். நான் எங்க உறவினர் என்று சொல்லி ரூ.5,000/– ஆக குறைச்சுக்க சொல்லி இருக்கேன். அதனால் ரூ.5,000/– பணம் கொடு உனக்கு பட்டா வந்துருச்சு பணம் கொடுத்துட்டு பட்டா வாங்கிக்கன்னு சொன்னார். நான் அதற்கு என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை தீபாவளி முடியட்டும் பார்க்கலாம் என்று சொன்னேன். பின்னர் 13.10.2025 ஆம் தேதி திங்கட்கிழமை காலை சுமார் 8.00 மணிக்கு வாணியின் மகன் என் வீட்டிற்கு வந்து அம்மா பணம் வாங்கிவர சொன்னாங்க என்று கேட்டான். நான் 'எதுக்குடா என்று கேட்டதற்கு தெரியாது என்று சொன்னான். நான் அவனிடம் வீட்டாண்ட வந்து அம்மாகிட்ட பேசிக்கிறேன் போடா என்று சொல்லி அனுப்பிவிட்டேன். பின்னர் அன்றே காலை சுமார் 9.00 மணிக்கு பக்கத்து தெருவில் உள்ள கிராம உதவியாளர் திருமதி.வாணி அவரின் வீட்டிற்குச் சென்று அவரை பார்த்த

போது ரூ.5,000/- கொடுத்தால் தான் மனையகார் பட்டா கொடுப்பார் இல்லனா உங்க பட்டாவை திருப்பி அனுப்பி விடுவார்னு சொன்னார். நான் என்ன சொல்வது என்று தெரியாமல் அமைதியாக வந்துவிட்டேன். இந்நிலையில் நேற்று 15.10.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு நேராக சென்று மனையகார் அலுவலகத்தில் மனையகாரைப் பார்க்கலாம் என்று போனேன். அப்போது மனையகார் அங்கு இல்லை. அங்கே அலுவலகத்தில் உட்கார்ந்திருந்த வடபுதுப்பட்டு சிப்பந்தி வாணி மற்றும் மற்றொரு கிராம சிப்பந்தி திரு.வெங்கடேசன் அங்கு இருந்தார்கள். அப்போது நான் சிப்பந்தி திருமதி.வாணியிடம் அம்மா என்னால அவ்வளவு பணம் ரெடி பண்ணமுடியல அதனால மனையகார பார்த்து கேட்டா ஏதாவது செய்வார்னு வந்தேன்னு சொன்னதற்கு மனையகார் ரூபாய் பத்தாயிரம் கொடுத்தால் தான் பட்டா கொடுப்பார். நான் எவ்வளவோ கெஞ்சி என் சொந்தக்காருன்னு சொல்லி ரூ. 5,000/- ஆக குறைச்சிருக்கு அதனால் ரூ.5,000/-கொடுத்தால் தான் பட்டா இல்லனா உங்க பட்டாவை திருப்பி அனுப்பிடுவோம் பணம் இருந்தா வா என்று சொன்னார். அப்போது பக்கத்திலிருந்த மற்றொரு சிப்பந்தி வெங்கடேசன் என்னிடம் கோவமாக ரூ.10,000/- கொடுத்துட்டு போ ஊர்ல எத்தனையோ பேரு இடம் இல்லாம எவ்வளவு கஷ்டப்படுறாங்க உனக்கு கஷ்டப்பட்டு பட்டா ரெடி பன்னா அதுக்கு உன்னால பணம் கொடுக்க முடியாதா ஊரில பத்தாயிரம் கொடுத்தாதான் பட்டா. உனக்கு ரூபாய் ஐயாயிரம் கொறச்சி தான் சொல்லியிருக்காங்க ரூ.5000/- இருந்தா தான் பட்டா இல்லன்னா உன் பட்டாவை திருப்பி அனுப்பிடுவாங்க அவங்க கேக்கறத கொடுத்துட்டு போ என்று என்னிடம் கூறிவிட்டார். நான் எதுவும் பேசாமல் நாளை வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு ரூ.5,000/- இலஞ்சம் கொடுத்து இலவச வீட்டு மனை பட்டா பெற விருப்பமில்லை. தற்போது என்னிடம் பணம் இல்லாததால் எங்களூரை சேர்ந்த வெங்கடேசன் என்பரிடம் ரூ.5000/- கடனாக வாங்கி வந்துள்ளேன். என்னிடம் இலஞ்சம் கேட்டவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுத்து அரசு என் மனைவி பெயரில் இலவசமாக கொடுத்துள்ள பட்டாவை எங்களுக்கு இலவசமாக வாங்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்ல சொல்ல காவல் ஆய்வாளராகிய தாங்கள் என் முன்னிலையில் லேப்டாப்பில் பதிவு செய்தீர்கள். படிக்க கேட்டான் சொன்னபடி உள்ளது. இப்படிக்கு, (Sd/- XXXX) பழனி. 16.10.2025 Madam, Statement Recorded by me on 16.10.2025 at 08.40 hrs, after verifying the antecedents of the accused and credibility of the complainant on 16.10.2025 at 10.30 hrs registered a case in Tirupathur V&A.C. Crime No.04/2025 u/s 7 of the Prevention of Corruption Act-1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018 (Sd/- XXXX) 16.10.2025 (B.Gowri) Inspector of Police, Vigilance and Anti- Corruption, Tirupathur.

The FIR in original along with the complaint and its enclosures sent to the Hon'ble District Session Judge cum Special Judge, Tirupathur and sent the other copies to the officers concerned.

16/10/2025

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Tirupathur